ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2359/41 - 2023 නොවැම්බර් මස 24 වැනි සිකුරාදා 2023.11.24
*2359/41 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# *பகுதி IV (அ) - மாகாண சபை*

## *மாகாண சபை அறிவித்தல்கள்*

மத்திய மாகாண மாகாண சபை

**ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை**

பொழுதுபோக்கு வரி விதித்தல்

*(267 ஆவது அதிகாரமான) பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (I) ஆவது உப பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையில் 2023.03.16 ஆந் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத் தீர்மான இலக்கம் 05.04 இன் கீழ் அனுமதிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் மேலே உள்ள பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது உப பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே ஆகிய என்னால் இத்தால் பிரசுரிக்கப்படுகின்றது.*

சட்டத்தரணி **லலித் யூ. கமகே,**
ஆளுநர்,
மத்திய மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்,
*2023, யூலை 11.*

**தீர்மானம்**

*1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2(1) மற்றும் 1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பொழுதுபோக்கு வரி திருத்தச் சட்டத்துக்கிணங்க, ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் பொழுதுபோக்கு வரி அறவிடுவதற்காக நுழைவுச் சீட்டின் பெறுமதியில்,*


*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ரூ. 10.00 முதல் 100.00 வரை - 5%*
*ரூ. 101.00 முதல் 500.00 வரை - 10%*
*ரூ. 501.00 முதல் 1000.00 வரை - 15%*
*ரூ. 1001.00 இற்கு மேல் - 20%*

பொழுதுபோக்கு வரியாக அறவிடுவதற்கு சபையின் அங்கீகாரம் வழங்குவது பொருத்தமானது எனவும், அதற்காக மாகாண உள்ளூராட்சிக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அனுமதியைப் பெறுவதே பொருத்தமானது எனவும் தீர்மானிக்கின்றேன்.

EOG 11- 0214

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.